Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

# வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 65 | கர்த்தர் எல்லார் மேலும் தயவுள்ளவர் சங்.145:9 | அக்டோபர் 2019 No.10

## மிக முக்கியமான ஏழு கேள்விகள்
## *Seven questions of vital importance*

Oswald J.Smith (1889-1986)

**1. நான் ஏதேனும் பாவத்தைத் தெரிந்து செய்கிறேனா?**

"என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவி கொடார்." நான் என்ன பேசுகிறேன் என்பதைக் கூட அவர் கவனிக்க மாட்டார். நான் என்னில் பாவத்தை சேமித்து வைத்திருந்தால் எனது ஜெபங்களுக்குப் பதிலளிக்கப் படுவதில்லை.

எபி.12:1-ல் சொல்லப்பட்டிருக்கிறபடி அறிந்து செய்கிற பாவங்கள் நம்மை சுற்றி நெருங்கி நிற்கிற பாவங்களாகும். அது ஒரு பாரமாகவோ, விக்கிரகமாகவோ இருந்தாலும் அது பாவமே. அதை விட்டுவிடும்படி தேவன் கூறுகிறார்.

"உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாக பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே அவர் உங்களுக்கு செவிகொடாதபடி அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" ஏசா.59:2. பாவம் பிரிவினையை ஏற்படுத்துகிறது. அது தேவனுடைய முகத்தை மறைக்கிறது. பாவம் குடிகொண்டிருக்கிற இடத்தில் உறவும் ஐக்கியமும் இருக்க முடியாது. "....... கிறிஸ்துவின் நாமத்தை சொல்லுகிற எவனும் அநியாயத்தை விட்டு விலகக்கடவன்......." 2 தீமோ.2:19.

இது தேவ கட்டளை. அவரது அங்கீகரிப்பை பெற்றுக்கொள்ள அறிந்த பாவங்களை விட்டுவிட வேண்டும். தவறு என்பவைகளையும், ஆவியானவர் துக்கப்படுவதற்கு ஏதுவானவைகளையும் விட்டு திரும்புவோம். இல்லாவிடில் கிறிஸ்தவ வாழ்வில் நாம் முன்னேற வழி இல்லை.

பாவம் எந்திரக் கல்லை போன்றது. அது எப்போதும் நம்மை அழுத்திக்கொண்டே இருக்கும். அதற்கு இடம் கொடுத்தால் அதன் மேலுள்ள ஆசையை மறுபடியும் தூண்டும். ஒரு கிறிஸ்தவனின் வாழ்வில் பாவம் குடியிருக்கவே கூடாது.

பிலி.4:7-ல் சொல்லப்படும் "எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம்" நம்மில் ஏற்பட எந்த கிரயம் செலுத்தியாவது பாவத்தை விட்டுவிட வேண்டும். அதை விட்டுவிடாவிட்டால் அது நம்மை அழித்துவிடும். "துரோகிகளுடைய வழியோ கரடுமுரடானது" நீதி.13:15.

இயேசு கிறிஸ்துவை நினைத்துப் பாருங்கள். அவர் சகல கண்ணிகளையும், பொறிகளையும், சங்கிலிகளையும் உடைத்தெறியக் கூடியவர். சிறைப் பட்டவர்களை விடுதலை பண்ண அவரால் கூடும். உங்களை நெருக்கிக் கொண்டிருக்கும் சகல பாவத்திலிருந்தும் விடுதலை பண்ணக்கூடியவர் அவர் ஒருவரே. அவர் நம்மை இரட்சிப்பதோடு பாதுகாக்கவும் கூடியவர். அவர் நம்மை நிலைநிறுத்தக்கூடியவர். நம்மில் வாசம் பண்ணும் அவரது ஆவியால் நாம் எந்த பாவத்தின் மேலும் வெற்றிபெற முடியும். நாம் முற்றிலும் ஜெயம் கொள்ளுவோம்.

**2. தேவ சித்தத்திற்கு கீழ்படிந்து வாழ்கிறேனா?**

"நீங்கள் உங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்" ரோமர் 6:13. 'ஒப்புவித்துவிட்டேன்' என்று பாடுவது மட்டுமல்ல முற்றிலும் ஒப்புவிப்பது அவசியம். 'ஆண்டவரே உம்முடைய வழியில் என்னை நடத்தும்' என்று மறுபடியும் மறுபடியும் நான் கூறினாலும் அது அர்த்தமுடையதாயிருக்கிறதா? அவர் விரும்பும் இடத்திற்கு நான் செல்கிறேனா? அல்லது என் சொந்த வழியில் செல்கிறேனா? கிறிஸ்துவுக்கு பதிலாக சுயத்திற்கு முதலிடம் கொடுக்கிறேனா? எனது வாழ்வில் அவர் ஆண்டவரும் எஜமானுமாயிருக்கிறாரா?

தேவபிள்ளைகளுக்கு கீழ்படிதல் வேண்டும். நாம் சுயசித்தமுள்ளவர்களாயிருந்தால் அவர் நம்மை பயன்படுத்த முடியாது. "....... பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதல் ....... உத்தமம்" 1 சாமு.15:22. முரட்டாட்டம் ஆபத்தானது. தப்பு தவறுகள் அறியாமைகள் மன்னிக்கப்படும். ஆனால் கீழ்ப்படியாமை ஒருபோதும் மன்னிக்கப்படுவதில்லை.

தேவனால் நாம் பயன்படுத்தப்பட கீழ்படிதல் மிகவும் அவசியம். தேவன் விரும்பும் இடத்திற்குச் செல்ல நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும். நமது வழிகளுக்குப் பதிலாக அவரது வழிகளும் நமது தெரிந்தெடுப்புகளுக்குப் பதிலாக அவரது தெரிந்தெடுப்புகளும் முக்கியம் பெறவேண்டும். நாம் நம்மை முற்றிலுமாக அவருக்கு அர்ப்பணிக்கும் போது அவரது திட்டம் நமது திட்டமாகவும், அவரது சித்தம் நமது மகிழ்ச்சியாகவும் மாறிவிடும்.

அவர் ஒரு கடின எஜமானனல்ல. நாம் செய்ய விரும்பாததை அவர் கட்டாயப்படுத்துபவருமல்ல. அவர் நமது தந்தை, நம்மை அமர்ந்த தண்ணீர்களண்டை நடத்துகிறவர். நமது இருதயங்களில் அவருக்கு விருப்பமானவைகளைத் தருகிறார். நாம் அவரது சரீரமும், ஆத்துமாவும், ஆவியுமாயிருப்பதால் நாம் நம்மை அவருக்கு அர்ப்பணித்துவிட அவர் எதிர்பார்க்கிறார். எனவே நாம் கீழ்ப்படியக்கூடியதான உறவில் வருகிறோம்.

**3. ஜெபத்தில் நான் ஒவ்வொரு நாளும் சமயம் செலவிடுகிறேனா?**

ஜெபமின்றி வாழ்வில் ஜெயமில்லை. நீங்கள் ஜெபத்தை விட்டுவிட்டால் பெலவீனராகிவிடுகிறீர்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புது பெலன் பெறுவது நிச்சயம். நீங்கள் ஜெப சூழலில் வாழாவிட்டால் எதிரியின் தாக்குதலுக்கு ஆளாவீர்கள். ஆண்டவராகிய இயேசு இரவு முழுவதும் ஜெபித்தார். ஆதித் திருச்சபை விசுவாசிகளும் அதிகமாக ஜெபித்தனர். தேவனால் பயன்படுத்தப்பட்ட அனைத்து மக்களும் அதிகமாக ஜெபித்தவர்கள் என்பது உண்மையிலும் உண்மை.

எனவே நாம் நம்மையே இக்கேள்வியைக் கேட்டுப் பார்ப்போம். நான் தேவனோடு ஒரு தீர்மானம் செய்து அதைத் தினமும் கவனமாக செயல்படுத்துகிறேனா? தவறாமல் ஜெபிக்கிறேனா? தேவன் என்னை ஒரு ஜெபிக்கும் மனிதனாகப் பார்க்கிறாரா? அல்லது நான் தவறியிருக்கிறேனா? அப்படியானால் நான் என்னை சரி செய்து கொண்டு அனுதினமும் ஜெபிக்கவும் அவர் வருகையில் நான் தூங்குகிறவனாகக் காணப்படாமலிருக்க என் உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

**4. தேவ வசனத்திற்கு கருத்தான மாணவனாக இருக்கிறேனா?**

தேவன் தமது வசனத்தின் மூலம் நம்மோடு பேசுகிறார். அவரது வசனத்தினை உதாசீனப்படுத்துவது அவரது சத்தத்தை விட்டு நம்மை தூரப்படுத்துவதாகும். ஆக வேதவசனத்தை வாசிக்க சமயம் கொடுக்காவிட்டால், நாம் வழிநடத்ததுதலைப் பெற முடியாது. இவ்விதமாக அனேகர் வழிதவறியிருக்கிறார்கள். வேத வசனத்தின் இடத்தை வேறு எதுவும் பெறமுடியாது. அது மனிதனுக்கு அருளப்பட்ட தேவ வார்த்தை. உண்மையாக நாம் அவரை அறிந்திருப்போமானால் அதனைப்

(4-ம் பக்கம் பார்க்க)

# வருகையின் தூதன்

ஆசிரியர்:

வெஸ்லி தேவதாசன்

(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony



கடிதங்கள், காணிக்கை, ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி : **வருகையின் தூதன்,** நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் – 629 001

**VARUKAYIN THOOTHAN,** Newport Street, Nagercoil-629 001.

**Mobile:** 95432 21008, 9489740295, **e-mail:**Varukayinthoothan@hotmail.com

அலுவலகம் : காலை 10.00 முதல் 1.00 வரை
மாலை 02.00 முதல் 6.00 வரை
(ஞாயிறு விடுமுறை)


## இம்மாத பொன்னான சிந்தனை

மன்றாடும் மக்களால் மாத்திரமே பாதாளத்தின் வாசல்களை அடைக்கமுடியும். – ஜான் வெஸ்லி

## வாக்குத்தத்தம்

**நீ** தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினி ஜுவாலை உன்பேரில் பற்றாது. ஏசாயா 43:2

### கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

அக்டோபர் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். 2019-ம் ஆண்டு முடிய இன்னமும் நவம்பர், டிசம்பர் ஆகிய இரண்டு மாதங்கள் மாத்திரமே இருக்கிறது என்பதை அன்பான தூதன் வாசகர்களுக்கு நினைவுபடுத்துகிறேன். “எங்கள் நாட்கள் எல்லாம் உமது கோபத்தால் போய்விட்டது; ஒரு கதையைப் போல் எங்கள் வருஷங்களைக் கழித்துப் போட்டோம். நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்” சங்கீதம் 90:9, 12.

**வாசகர் கடிதம்:**

*Praise the Lord*

*Tiruchi*
*20.08.2019*

*Bro. in Christ,*

கர்த்தருடைய பெரிதான கிருபையால் 82 வயதிலும் தேவனுக்கென்று என்னால் முடிந்த சிறிய ஊழியங்களை செய்து வருகிறேன். 2016-ல் எனது கணவர் 89 வயதில் மகிமைக்குள் பிரவேசித்தபின் மிகவும் வேதனையடைந்தேன். என் பரம தகப்பன் ஒரு தாய் தேற்றுவது போல் தேற்றி கலங்காதே மகளே, நான் உயிரோடிருக்கிறேன் என்றார். அல்லேலூயா!

நான் தூத்துக்குடியில் படிக்கும் நாட்களிலும் வேலை செய்த போதும் ஐயா தேவதாசன் பிரசங்கங்களை கேட்டவள். இன்றும் அவர் **வருகையின் தூதன்** மூலம் பேசி வருகிறார். அவரது சந்ததியாகிய உங்களை ஆரோக்கியமாக வழிநடத்தி தொடர்ந்து பத்திரிகையை நடத்த பெலப்படுத்துவாராக. ஆமென்.

**வருகையின் தூதன் ஊழியங்களின் தேவை மாதம் ரூபாய் 1 லட்சம். ஆண்டவர் உங்களை ஏவுகிறபடி உதாரத்துவமாய் உதவுங்கள்.**

**வங்கி கணக்கு :**

| | |
|---|---|
| **பத்திரிகை :** | **VARUKAYIN THOOTHAN,** A/c. No.:431521036<br>Indian Bank,W.C.C. Road, Nagercoil-1<br>IFS Code : IDIB000N006 |
| **உபவாச ஜெபம் :** | **WESLEY DEVADASON,** A/c. No.: 370601000002557<br>I.O.B., Court Road, Nagercoil-1<br>IFSC Code : IOBA0000063 |
| **முன்னேற்றப்பணி :** | **WESLEY DEVADASON,** A/c. No.: 61822200136904<br>Syndicate Bank, W.C.C. Road, Nagercoil-1<br>IFSC Code : SYNB0006182 |

தாங்கள் நடத்தும் **எழுப்புதலுக்கான இதயக்கதறல்** உபவாசக் கூடுகைக்காக இந்த சிறு காணிக்கையை அனுப்பியுள்ளேன். அன்புடன் பெற்றுக்கொண்டு அடியாளின் சுகத்திற்காகவும் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் அவர்கள் பிள்ளைகளுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள் ஐயா!

கர்த்தருக்குள் அன்புத் தாயார்
M.S.,

இம்மாதம் வருகையின் தூதன் பத்திரிகை ஊழியத்தைப் பற்றியும், கர்த்தருக்குச் சித்தமானால் நவம்பர் மாதம் உபவாச ஊழியத்தையும், டிசம்பர் மாதம் வருகையின் தூதன் ஊழியத்தின் ‘முன்னேற்ற பணி’ பற்றியும் எழுதுவேன்.

கடந்த காலங்களில் சில சந்தர்ப்பங்களில் கிறிஸ்தவ பத்திரிகைகளுக்கு அரசு வழங்கி வந்த தபால் சலுகை நிறுத்தப்பட்டது. அப்பொழுதெல்லாம் நம்முடைய அச்சகத்தில் அச்சிடப்பட்ட சில கிறிஸ்தவ பத்திரிகைகள் கூட காணாமல் போயின.

எனது தகப்பனார் வருகையின் தூதன் பத்திரிகையின் தலைமை பொறுப்பு ஆசிரியராக (Editor in Chief) இருந்தபோது **வருகையின் தூதன்** இந்தியாவில் 18 மொழிகளில் தனித்தனி ஆசிரியர்களால் அச்சிடப்பட்டு வெளிவந்தது.

எனது தகப்பனார் எவ்வளவோ எழுதியும், கேட்டுக் கொண்டும் அந்த ஆசிரியர்கள், அந்தந்த மொழி பத்திரிகைகளை சுய ஆதரவு செய்யாமல் (Self Support) எனது தகப்பனார் வழியாக மாதா மாதம் உதவி பெற்று நடத்தினார்கள்.

நடந்ததென்ன? இன்று **வருகையின் தூதன்**, மலையாளம், மராத்தி மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரமே வெளிவருகிறது.

இப்பொழுதும் இதே பிரச்சனை தமிழ்நாட்டிலுள்ள சில பத்திரிகைகளுக்கு நேரிட்டுள்ளதை அடியேன் அறிவேன். ஒரு கிறிஸ்தவ பத்திரிகை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வெளியிடப்படுகிறதைக் கண்டேன்.

அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே, கடந்த இரண்டு ஆண்டுகளாக அநேக காரியங்களை அடிமை உங்களுக்கு மாதா மாதம் எழுதியதை வாசகராகிய நீங்கள் அறிவீர்கள். எனவே சுருக்கமாக கீழே சில குறிப்புகளை மாத்திரம் எழுதுகிறேன்:

1. எல்லா ஊழியங்களைப்போல, வருகையின் தூதன் ஊழியத்தையும் **தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.**
2. கர்த்தர் உங்களை ஏவுகிறபடி தாராளமாய் விசேஷ காணிக்கை அனுப்புகிறீர்கள், நன்றி.
3. வருடத்திற்கு ஒருமுறை மாத்திரம் காணிக்கை அனுப்புகிற தேவனுடைய பிள்ளைகள், குறைந்தபட்சம் ரூபாய் 500/- அனுப்பும்படி அதிக அன்பாய் கேட்கிறேன்.
4. நேரிலோ, M.O., D.D., M.T., Cheque மூலமாகவோ ரூபாய் 100 சந்தா என்று எழுதியோ, எழுதாமலோ தயவுசெய்து அனுப்பாதீர்கள்.
5. ஒவ்வொரு தடவையும் நீங்கள் காணிக்கை அனுப்பும் போதும் தயவாய் உங்கள் **பதிவு எண்**, போன் நம்பரை கட்டாயம் எழுதுங்கள்.
6. நாங்கள் இதுவரை யாருக்கும் பத்திரிகை அனுப்புவதை நிறுத்தவில்லை. பத்திரிகை வரத்தவறினால் உடனே எங்களுக்கு தெரிவியுங்கள், கொரியர் மூலம் அனுப்புவோம்.
7. வங்கி வழியாய் காணிக்கை அனுப்புவோர் தயவாய் உடனே எங்களுக்கு தெரிவியுங்கள், நன்றி.

கர்த்தருக்குச் சித்தமானால் அக்டோபர் மாதம் 15-ம் தேதி மறுபடியும் மருத்துவ சோதனைக்காக சென்னை செல்லுகிறேன்.

கர்த்தருக்குச் சித்தமானால் நவம்பர் மாதம் 9-ம் தியதி 2-வது சனிக்கிழமை சேலம் மாவட்டத்தில் எழுப்புதலுக்காக இதய கதறல் 7 மணி நேர உபவாச ஜெபமும், டிசம்பர் மாதம் 7-ம் தியதி குமரி மாவட்டம் பள்ளியாடி, கிறிஸ்துகோவில் L.M.

(3-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்க தொடர்ச்சி)

சபையிலும் நடைபெறும். வாசகர்கள் தயவாய் ஜெபிக்கும்படி அன்பாய் கேட்கிறேன்.

கர்த்தருக்குச் சித்தமானால் 2020-ம் ஆண்டு முழுவதும் சென்னையிலுள்ள சபைகளில் இவ்வித உபவாச ஜெபங்களை நடத்த ஏவப்படுகிறோம். சென்னையிலுள்ள **தேவ தாசர்கள் உங்கள் சபை கட்டிடத்தை ஒரே ஒரு விசை மாத்திரம் இந்த உபவாச ஜெபத்திற்கு திறந்து தரும்படி மிகுந்த அன்புடன் கேட்கிறேன்.**

நடைபெறும் விதம் :

| | | | |
|---|---|---|---|
| 10.00 | - | 10.30 | ஆரம்ப பாடல்கள் (Singing) |
| 10.30 | - | 11.00 | ஆராதனை (Worship) |
| 11.00 | - | 11.30 | ஊழிய அறிமுகம், ஊழியர் அறிமுகம் |
| 11.30 | - | 12.00 | உபவாசம் என்றால் என்ன? எழுப்புதல் என்றால் என்ன? |
| 12.00 | - | 01.00 | தரிசன செய்தி I |
| 01.00 | - | 02.00 | தேசத்திற்காக ஜெபம் |
| 02.00 | - | 02.15 | விசேஷ பாடல்கள் (தேனீர்) |
| 02.15 | - | 03.15 | தேசத்திற்கான சவால் |
| 03.15 | - | 04.00 | தரிசன செய்தி II |
| 04.00 | - | 05.00 | 7 விசேஷ ஜெபக்குறிப்புகள் |

## எழுப்புதலுக்காக இதய கதறல் சென்னை 2020
## Heart cry for Revival Chennai 2020

| மாதம் | தேதி | இடம் |
|---|---|---|
| ஜனவரி | 18.01.2020<br>3-வது சனி | Elohim Apostolic Church<br>Pudichur, Chennai |
| பெப்ரவரி | 08.02.2020<br>2-வது சனி | Christian Assembly Mission<br>Ayanavaram, Chennai |
| மார்ச் | | |
| ஏப்ரல் | | |
| மே | | |
| ஜுன் | | |
| ஜுலை | | |
| ஆகஸ்ட் | | |
| செப்டம்பர் | 19.09.2020<br>3-வது சனி | Jesus Cares Assembly<br>Anna Nagar, Chennai |
| அக்டோபர் | | |
| நவம்பர் | | |
| டிசம்பர் | | |

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
**வெஸ்லி தேவதாசன்**
(WESLEY DEVADASON)

உதவி : 94897 40295
அலுவலகம் : 95432 21008

## நவம்பர் மாத உபவாச ஜெபம்
***Heart cry for Holy Spirit Revival***

## எழுப்புதலுக்காக இதய கதறல் 2019
**(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)**

காலம் : ***09.11.2019*** 2-வது சனிக்கிழமை
சமயம் : காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை
இடம் : **Eternal Life A.G**
Syndicate Bank Upstairs, Yercard Main Road,
Kandapanaickanpatty, Salem - 636008

தொடர்பு : **Pr. Stalin Selvakumar**
மொபைல் : **9790231377**

# பரிசுத்த ஆவியானவர் பாவ உணர்வை உருவாக்குகிறார்
***The holy spirit produces conviction***

R.A. Torrey (1856-1928)

தூய ஆவியானவர் மனிதனுக்கு இயேசுக் கிறிஸ்துவையும் அவரது மகிமையையும் வெளிப்படுத்தும் வல்லமையை உடையவர். "பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும் பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்து சாட்சி கொடுப்பார்" யோவா.15:26 என்று இயேசு சொன்னார். அவர் கிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுப்பதால்தான் நாம் கிறிஸ்துவைக் குறித்த உண்மையான அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆயினும் 1 கொரி.12:3-ன் படி "பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாது". நமது சாட்சியும் தேவ வசனமும் மட்டும் போதாது. அவை பரிசுத்த ஆவியால் பயன்படுத்தப்பட வேண்டும்.

நமது சாட்சி பரிசுத்த ஆவியால் பயன்படுத்தப்பட்டு அவரே சாட்சிகரிக்காவிட்டால் மக்கள் விசுவாசிக்க மாட்டார்கள். பெந்தேகொஸ்தே நாளில் யூதர் உணர்த்தப்பட காரணமாயிருந்தது பேதுருவின் வார்த்தைகள் மட்டுமல்ல ஆவியானவரே அதற்கு சாட்சியாயிருந்தார். எனவே இயேசுவைக் குறித்த சத்தியத்தைக் கண்டுகொள்ள உங்கள் திறமைகளை சார்ந்து கொள்ளாமல் பரிசுத்த ஆவியானவரை சார்ந்துகொண்டு அவரது சாட்சியை நாடவேண்டும்.

### பரிசுத்த ஆவியானவர் உணர்த்துவார்
(யோவா 16:8-13 படிக்க)

தூய ஆவியானவர் உலகத்தை அதின் பாவத்தைக் குறித்து உணர்த்தக்கூடியவர். இயேசுவையும் அவரது மகிமையையும் காண்பித்த பின்பு தூய ஆவியானவர் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவார். அவரை விசுவாசியாமற் போனது பாவம். (அப்.2:36-37 படிக்க)

நாம் எந்த மனிதருடைய பாவத்தையும் உணர்த்த முடியாது. அது ஆவியானவருடைய பணி.

பலவேளைகளிலே நாம் வேதத்தின் பகுதிகளைக் கொண்டு பேசினாலும் மனிதர் அசையாமலிருக்கிறார்கள். நாம் இந்த மனிதன் ஏன் பாவ உணர்வடையவில்லை என்று ஆச்சரியப்படுகிறோம். திடீரென இது நமது பணியல்ல என உணர்ந்து ஆவியானவரிடம் ஒப்படைக்கிறோம். அவர் உடனே கிரியை செய்கிறார். பாவ உணர்வு அந்த மனிதனில் ஏற்படுகிறது. மிகக் கவலையீனமானவர்களைக் கூட ஆவியானவர் உணர்த்தக்கூடும் என்பது அனுபவத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

யோவா.16:7-8 வசனங்களில் "...... நான் போவேனேயாகில் அவரை (தேற்றரவாளன்) உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். ஆகவேதான் பேதுருவின் பிரசங்கத்தால் 3000 பேர் இரட்சிக்கப்பட்டார்கள். ஆக வசனத்தைப் பிரசங்கித்து விட்டு தூய ஆவியானவர் பாவ உணர்வைக் கொடுக்கும்படி அவரை நோக்கிப் பார்க்கவேண்டும். (அப்.2:4-37 படிக்க)

### ஆவியானவர் மறுரூபப்படுத்துகிறார்

"நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே மறு ஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்" தீத்து.3:5.

தூய ஆவியானவர் மனிதரை மறுரூபப்படுத்தி புதிய சிருஷ்டியாக மாற்றக்கூடியவர். பாவத்திலும் அக்கிரமத்திலும் மரித்த ஒருவரை உயிர்ப்பிக்க அவரால் கூடும். தேவ சத்தியத்திற்கு மனம் குருடாகிப்போன ஒருவரையோ, தேவனுக்கு எதிராளியாக பாவத்தில் வாழ்கிற ஒருவரையோ, மாற்றி தேவ சாயலை அவருக்கு அளிக்க முடியும். அவனுடைய எண்ணங்கள், சித்தம், அன்பு, வெறுப்பு யாவும் தேவனுடையவைகளாகவே மாறிவிடுகின்றன.

எனவே எந்த ஒரு மனிதனைக் குறித்தும் நாம் நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை.

(1-ம் பக்க தொடர்ச்சி)

படிக்க ஆவலுடனிருப்போம். அதை அதிகமாகப் படிக்கப்படிக்க அதிலுள்ள விருப்பமும் அதிகரிக்கும். அதைப் படிக்காமலிருக்க முடியாது. அனுதின பணி செய்ய அது உணவாகவும் பானமாகவுமிருக்கும்.

எனது கிறிஸ்தவ வாழ்வின் ஆரம்ப நாட்களில் நான் இதனை மறுபடியும் மறுபடியும் பயன்படுத்தினேன். நான் மனந்திரும்பிய ஆரம்ப நாட்களில் இதனை அனுதினமும் படித்தேன். ஆனால் இப்போதும் அவ்வாறு செய்கிறேனா? இன்றும் எனக்கு அது புதிய அனுபவமாக இருக்கிறதா? அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் ஆகியோரைப் போல என் அனுபவம் காணப்படுகிறதா? தாவீதின் சங்கீதங்கள் என்னை ஆறுதல்படுத்துகின்றனவா? தேவ வசனம் எனக்கு ஜீவனுள்ள புஸ்தகமாயிருக்கிறதா? அதை தினமும் உட்கொள்ளுகிறேனா?

நான் பெலவீனனாயிருக்கலாம். அவரது வசனம் பாலுக்கும் இறைச்சிக்கும் ஒப்பாயிருக்கிறதே. எனவே நான் பெலனடைய அதை எப்போதும் உட்கொள்ள வேண்டும். தேவன் தாமே ஒரு உத்தம மாணவனாக அதைப் படிக்க உதவி செய்வாராக.

**5. கிறிஸ்துவை பகிரங்கமாக அறிக்கை பண்ணுகிறேனா?**

எனது கிறிஸ்தவ அனுபவத்தின் ஆரம்ப நாட்களில் நான் ஆத்தும ஆதாயத்தில் நெருப்பாயிருந்தேன். தெருக்களின் முனைகளில் தேவ பிள்ளைகளின் உதவியோடு இணைந்து எனது சாட்சியைப் பகிர்ந்து கொண்டேன். ஆத்தும ஆதாயப் பணியில் கிடைத்த வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்தி களிகூர்ந்தேன். மனந்திரும்பாதவர்களைக் குறித்த அதிகமான பாரம் எனக்கிருந்தது. எனது ஆதி அன்பின் உந்துதலால் தேவன் எனக்குச் செய்தவைகளையெல்லாம் மற்றவர்களுக்கு அறிவித்தேன்.

ஆனால் இன்று என் நிலை என்ன? ஆதி அன்பை விட்டுவிட்டவனாக குளிர்ந்த நிலையில் நிர்விசாரமாயிருக்கிறேனா? தேவ அக்கினி என் இருதயத்தில் எரியவில்லையா? அழிந்து போன ஆத்துமாக்களின் அக்கரையின்றியே ஆலயம் சென்று சமய கடமைகளில் ஈடுபடுகிறேனா? என்ன நடந்தது? 'அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களை இரட்சியும்' என்று பாடுகிறநான் அவர்கள் மீட்கப்பட என்ன செய்கிறேன்? மடிந்து கொண்டிருக்கிறவர்களுக்காகக் கரிசனை கொள்ளுகிறேனா? அவர்களுக்காகக் கண்ணீர் விடுகிறேனா? அழிந்து போய்க் கொண்டிருக்கும் மக்களுக்காக எனது இருதயம் பாரப்படுகிறதா?

இவைகளை நான் செய்யாவிட்டால் அதற்குரிய காரணத்தையும், நிவாரணத்தையும் உடனே கண்டுபிடிக்க ஆரம்பிக்க வேண்டும். நான் கிறிஸ்துவை பகிரங்கமாய் அறிக்கையிட வேண்டும். அனைவருக்கும் அவரை அறிவிக்க வேண்டும். சாட்சியாயிருக்க அவர் கட்டளையிட்டிருக்கிறார். எனவே மறுபடியும் என் சாட்சியை ஆரம்பிக்க வேண்டும். சுவிசேஷ பிரதிகளை அனேகருக்கு விளம்ப வேண்டும். ஆத்தும ஆதாயத்திற்கான கடிதங்களை என் நண்பர்களுக்கு எழுதவேண்டும். நான் என்னோடு பணி செய்கிறவர்களுக்கு அவரை அறிவிக்க வேண்டும். நான் தேவனுடைய பிரதிநிதியாயிருந்தால் இவைகளில் நான் உண்மையாயிருக்க வேண்டும்.

**6. தேவன் என்னை ஆசீர்வதிக்கும் அளவிற்கு தாராளமாகப் பிறருக்கு உதவி செய்கிறேனா?**

"கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" லூக்.6:38. அவர் எந்த மனிதனுக்கும் கடனாளி அல்ல. தேவ பணிக்காகப் பத்தில் ஒன்றையாவது ஒதுக்க வேண்டும். அதைவிடக் கூடுதலாகவும் கொடுக்க வேண்டும். நீங்கள் அவருக்கு உத்தமமாயிருந்தால் அவரும் உங்களிடம் உத்தமமாயிருப்பார். "உதார குணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்." நீதி.11:25. ஆனால் நீங்கள் கொடுக்கும்போது ஆத்தும அறுவடைப் பணிக்காகக் கொடுக்க வேண்டும். உங்கள் தாலந்துகள் நல்ல விதமாக பயன்படுத்தப்பட தேவன் உங்களைப் பொறுப்புள்ளவர்களாக வைத்திருக்கிறார்.

"உற்சாகமாகக் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" 2 கொரி.9:7. ஒழுங்காகவும் கிரமமாகவும் கொடுக்க வேண்டும். "அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்?" ரோமர் 10:15 என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட யாரேனும் பொருளாதார உதவி செய்ய வேண்டாமா? தண்ணீர் இலவசமானதுதான். ஆனால் அதைக் குழாய் மூலம் எடுத்துவர செலவு செய்ய வேண்டுமே. சுவிசேஷம் இலவசமானதாக இருந்தாலும் பூமியின் கடைசி பரியந்தமும் எடுத்துச் செல்ல செலவு உண்டு. அப்போஸ்தலனாகிய பவுல் இதைக் கிறிஸ்தவனுக்கு அளிக்கப்பட்ட கிருபை என்கிறார். இந்த நாட்களில் வாழும் கிறிஸ்தவர்களாகிய நாம் மிகவும் தாராளமாகக் கொடுக்க வேண்டும்.

**7. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்காக எதையேனும் குறிப்பிட்டுச் செய்கிறேனா?**

தேவனால் நான் பயன்படுத்தப்பட வேண்டுமானால் ஒரு இடத்தையும் மக்களையும் கண்டுபிடித்து எனது சாட்சியினை அறிவிக்க வேண்டும். ஆத்தும ஆதாயம் செய்கிற ஒரு சபை எனது வீடாயிருக்க வேண்டும். நான் பிறரை இரட்சிப்பதற்காக இரட்சிக்கப்பட்டேன்; எனவே ஆண்டவருக்காக எதையும் செய்யாவிடில் அவர் எனக்குத் தந்த காட்சிக்கு உண்மையாயிருக்க முடியாது. எனக்கு அனேக தாலந்துகளில்லாவிட்டாலும் நான் எதையாவது செய்யமுடியும். உதாரணமாக வியாதியுள்ள மக்களை சந்திக்கலாம், சுவிசேஷ பிரதிகளைக் கொடுக்கலாம், ஆண்டவரைப் பற்றி சாட்சி கூறலாம், இன்னும் பல காரியங்களைச் செய்யலாம்.

அனேகர் கேட்கப்படுவதற்காகக் காத்திருக்கிறார்கள். அவர்கள் சபைக்கு வந்து ஆராதனைகளில் பங்கெடுக்கத் தாமாக முன்வருவதில்லை. போதகர் வந்து அவர்களை அழைத்து தேவையானால் எதைச் செய்ய வேண்டும் என்று கூறுவார் என்று எண்ணுகிறார்கள். உண்மையாக அவர்கள் இரட்சிக்கப்பட்டுவிட்டால் பவுலைப் போல, 'ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்' அப்.9:6 என்று கதறுவார்கள். புதிதாகப் பிறந்தவர்களின் வேண்டுதல் இதுவே. அன்பு சேவையை அடக்கியுள்ளது. எனவே ஆண்டவராகிய இயேசுவை நேசிக்கிறவர்கள் அவரை சேவிப்பார்கள். அவர்கள் சோம்பலாயிருப்பதில்லை.

சிலர் வந்து தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்பதற்குப் பதிலாக தேவனிடம் சென்று ஆலோசனை பெறுவார்கள். அதன் மூலம் ஒரு வேதபாடசாலை ஆசிரியையாகவோ ஒரு பாடற்குழு அங்கத்தினராகவோ, இசைக்குழுவோடு சேர்ந்து இசைக் கருவியை மீட்டவோ வழிநடத்தப்படலாம்.

சிலர் வாலிபர் மத்தியில் ஊழியம் செய்யவோ அல்லது மன்றாட்டு வீரராகவோ அழைக்கப்படலாம். அன்னிய நாட்டிற்கு முழு நேர சேவை செய்யவும் அழைக்கப்படலாம். உண்மையாக ஆண்டவரை இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்கள் அவருக்கு சேவை செய்யாமல் அமைதியாக இருக்கவே முடியாது.

எனவே நான் மறுபடியும் கேட்கிற கேள்வி நான் சுறுசுறுப்பாயிருக்கிறேனா? தேவனுக்காக எனது சமயம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளதா? அல்லது அழைப்பிற்காகக் காத்திருக்கும் வரிசையில் நான் இருக்கிறேனா? இரு வகையான தன்னார்வத் தொண்டர்கள் இருக்கலாம். செயல்படாத தன்னார்வத் தொண்டர்கள் 'ஆண்டவரே இதோ இருக்கிறேன்' என்பார்கள். செயல்படும் தொண்டர்கள் 'என்னை அனுப்பும்' என்பார்கள். நாம் எந்த நிலையிலிருக்கிறோம்?

'நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயிரு' 2 தீமோ.2:15. 'நல்லது உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே; கொஞ்சத்தில் உண்மையாயிருந்தாய், அனேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக்குவேன்' மத்.25:21 என்ற சத்தத்தைக் கேட்க வேண்டும். எனவே நம்மை நாமே ஆராய்ந்து பார்த்து அவர் எதிர்பார்க்கிறபடி நாம் வாழ்கிறோமா என சிந்தித்துப்பார்ப்போம்.

**கடைசி நாட்களில் ஆரோக்கிய உபதேசிகளைவிடத் துர்வுபதேசிகளும் கள்ளத்தீர்க்கதரிசிகளுமே திரளாய்க் காணப்படுவர் மத்.24:11; 2 தீமோ.4:1-4.**

# தேவ பணிக்கான ஒரே நோக்கம்

## *The one motive for the work of the Lord*

Rich Carmicheal

இதை எழுத ஆரம்பித்தபோது கௌண்ட் ஸின்ஸென் டார்ஃப் தலைமையில் மொரேவியர்களின் தூண்டுதலான சில செய்திகளை வாசிக்கும் வாய்ப்பு கிடைத்தது. ஆண்ட வருக்காக அவர்கள் செய்த பணியில் இந்த விசுவாச சமுதாயத்தினர் விசேஷித்த முன்மாதிரி நிலையையடைந்துள்ளனர். 1700-களிலும் 1800-களிலும் நூறு ஆண்டுகளாக விழித்திருப்பதிலும், ஜெபிப்பதிலும் எண்ணிமுடியாத மிஷனெறி சுவிசேஷ பணிகளிலும் அவர்கள் விசேஷித்து காணப்பட்டனர். கிழக்கு இந்தியத் தீவுகளில் வாழ்ந்த வட அமெரிக்க இந்தியர்கள் மத்தியிலும், கிரீன்லாந்தின் குளிர்ந்த மனித நடமாட்டமில்லாத கடற்கரைகளிலும், இருளான தூர இடங்களிலும், இருண்ட ஆப்ரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் ஐரோப்பா, ஆசியா கண்டங்களிலும் மொரேவியர்கள் சிலுவையை நாட்டி ஆயிரக்கணக்கான ஆத்துமாக்களை இயேசுக் கிறிஸ்துவுக்கு சொந்தமாக்கினர். தற்கால மிஷனெறி இயக்கம் வில்லியம் கேரி அவர்கள் ஆரம்பிப்பதற்கு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பாக இவை நடைபெற்றன. கேரி இவர்களிடமிருந்து தான் தூண்டுதலைப் பெற்றார்.

அவர்களது தாக்கமும், விசாலமும் ஆச்சரியப்படுவதற்கேதுவாயிருக்க காரணம் அவர்களது தியாகத்திலும் ஊழியத்திலும் காணப்பட்ட உந்துதல் என்பது மிகையல்ல.

ஆன்ட்ரூ இதனை இவ்வாறு விவரிக்கிறார் : கௌண்ட் ஸின்ஸென் டார்ஃப் என்பவரை தேவன் சுவிசேஷப் பணியில் இளம் சபைகளை பயிற்சிக்கவும், வழிநடத்தவும் அற்புத மாக ஆயத்தப்படுத்தினார். அவர் எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவரிடம் மென்மையான குழந்தை போன்ற மிகுந்த அன்பு உடையவர். சகல சுவிசேஷப் பணிகளுக்கு ஆரம்பமும், தூண்டுதலுமான ஆண்டவராகிய இயேசு அவரை ஆட்கொண்டிருந்தார். தேவாட்டுக்குட்டியாகத் தன்னை சாகும்படி ஒப்புவித்த அவரது அன்பு அவரது வாழ்வை நிரப்பியிருந்தது. வாழ்வதென்றாலும், சாவதென்றாலும் அவருக்கே என்ற அர்ப்பணம் அவரிடமிருந்தது.

மொரேவியர்களைப் பொறுப்பெடுத்தபோது அந்த அன்பு உந்துதலாயிருக்கும்படி வேண்டினார். அதை ஒரு வல்லமையாக நம்பினார். அதையே மக்களின் வாழ்வில் பயன்படுத்தினார்.

போதனைகளும், விவாதங்களும், கட்டுபாடுகளும் பயனுள்ளவைகள்தான். ஆனால் அவை செய்ய முடியாதவற்றை கிறிஸ்துவின் அன்பு செய்தது. அது பாவமாகக் காணப்பட்ட யாவையும் தள்ளி வைக்கக் கூடியது. இயேசுவை சாட்சியளிக்க மக்களுக்கு ஆவலைத் தூண்டியது. அந்த அன்பைப் பிறருக்கு அறிவிக்க தியாகம் செய்ய அனேகரை அது ஆயத்தம் பண்ணியது. இவ்வாறு இயேசுவின் இருதயம் சந்தோஷமடைய ஏதுவாயிற்று.

அவரது பினாமிகளுக்கு தேவன் அளித்ததென்ன? அவர்கள் சீர்திருத்திய சபைகளை நடத்த அவர்களிடம் காணப்பட்ட விசேஷித்த தகுதி என்ன?

முதலாவது உலகத்திற்கும் அதன் உதிர்பார்ப்புகளுக்கும் அவர்கள் விலகியிருந்தார்கள். நீடிய பொறுமை, தேவன் மேலுள்ள எளிய நம்பிக்கை ஆகியவற்றால் துன்பங்களும், பாடுகளும் அவர்களை பணிசெய்யத் தூண்டின. இவர்கள் பூமியில் தங்களை அந்நியரும் பரதேசிகளுமாக எண்ணினர்.

அவர்களில் தியாக சிந்தையும் ஆவியும் நிரம்பியிருந்தன. கடினங்களை சகிக்க அவர்கள் கற்றிருந்ததோடு ஒவ்வொரு துன்பத்திலும் தேவனையே நோக்கிப் பார்க்கக் கற்றிருந்தனர்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இயேசுக் கிறிஸ்துவின் மேல் தனிப்பட்ட ஆழமான பயபக்தி அவர்களிடம் காணப்பட்டது. அவர் தேவ ஆட்டுக்குட்டி என்றும் தமது இரத்தத்தால் அவர்களை மீட்டுக்கொண்டார் என்பதும் அவர்களது அசையாத நம்பிக்கை.

அவர்கள் ஒருவரை ஒருவர் சரிப்படுத்திக்கொண்டதும், தானாக பாவ அறிக்கை செய்து பாவத்தை விட்டுவிட்டதும் ஜீவனுள்ள கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினால் நடந்தது. அவர் மூலமாக தங்கள் இருதயங்களில் தேவசமாதானத்தையும், பாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலையையும் பெற்றிருந்தனர்.

இந்த விசுவாசம் தாங்கள் கிருபையினால் இரட்சிக்கப்பட்ட பாவிகள் என்ற நிலையைக் காத்துக் கொள்ள ஏதுவாயிருந்தது. இந்த விசுவாசம் வசனத்திலும், பாடலிலும், ஜெபத்திலும் ஒவ்வொரு நாளும் ஐக்கியமாயிருப்பது அவர்களது நோக்கமாயிருக்கும் எண்ணத்தை உருவாக்கியது.

இந்த விசுவாசம் அவர்கள் மிகப்பெரிய கஷ்டங்களில் மகிழ்ந்து களிகூரச் செய்தது. ஏனெனில் தங்களுக்காக மரித்த ஆட்டுக்குட்டியான வரின் வெற்றிமேல் நம்பிக்கை யுடனிருந்தனர். அவர் இன்றும் அன்புகூர்ந்து, இரட்சித்து, ஒவ்வொரு நிமிடமும் நிலைநிறுத்துகிறவர். எனவே அவர் கடின இருதயங்களையும் மேற்கொண்டு கேடான பாவியையும் ஆசீர்வதிக்கிறவர் என்ற நம்பிக்கை அவர்களிடமிருந்தது.

எனவே இந்த வகையான விசுவாசிகளின் கூட்டாய்மையால் அசாதாரணமான காரியங்களை தேவன் செய்தார் என்பதில் அதிசயமில்லை அவர்கள் தேவனை ஆழமாக நேசித்து தங்களுக்குரியவைகளையெல்லாம் அர்ப்பணித்து முழுமனதோடு அவரை சேவித்தார்கள். எல்லாம் அவருடைய மகிமைக்காகச் செய்தார்கள். இதுவே அவர்களது ஒரே நோக்கம்.

### கிறிஸ்துவின் மேலுள்ள நமது அன்பு

கிறிஸ்துவோடுள்ள நமது உறவின் ஆழத்தை பரிசோதிப்பது அவரது பணி ஒப்படைக்கப்பட்ட நமக்கு முக்கியமானது. அவர் நம்மை நேசிக்கிறார். நாம் அவரில் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும், முழு மனதோடும் அன்பு கூரவேண்டும் லூக்.10:27. அவரோடுள்ள நமது உறவும் அவரிடமுள்ள நமது அன்பும் மையமாயிருக்க வேண்டும். அவர் நமக்குக் கையளித்த பணியும் இவற்றிலிருந்து பாய்ந்து செல்ல வேண்டும்.

எபேசு சபையைக் குறித்து கிறிஸ்துவின் கடிதம் இதை நமக்கு நினைப்பூட்டுகிறது. அச்சபையின் விசுவாசிகள் அவருக்காகக் கடினமாக உழைப்பதில் சோர்ந்து போகவில்லை வெளி.2:3. ஆயினும் அவர்கள் தங்கள் ஆதி அன்பை விட்டுவிட்டதற்காக மனந்திரும்பும்படி பெலமாக உணர்த்தப்படுகிறார்கள் வெளி.2:4.

எனவே ஆண்டவரோடுள்ள நமது உறவையும் அன்பின் அளவையும் அவரிடமுள்ள பயபக்தியையும் ஆராய்ந்து பார்ப்பது அவசியம். கலா.2:2-ன் படி அவர் நம்மில் அன்புகூர்ந்து தம்மைத்தாமே நமக்காகக் கொடுத்தார். அவர் இன்னும் நம்மில் அன்புகூருகிறபடியால் நமது அன்பையும் பயபக்தியையும் ஆழப்படுத்துவோம். "எனது ஒரே வாஞ்சை அவரே (கிறிஸ்து) அவர் மட்டுமே" என்பது ஸின்லென்டார்ஃபின் கூற்று. அவர் ஒரு சிறந்த மாதிரி.

"நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவை சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்" கொலோ.3:23-24.

நாம் இன்று கிறிஸ்தவர்களாக செயல்படாததினால் தான் தேவனது வல்லமையான செயல்பாடுகள் மறைக்கப்பட்டுள்ளன. செயல்படுங்கள், கல்லறையை தேவன் திறப்பார், லாசரு உயிருடன் எழும்புவான். செயல்படுங்கள், சீஷர்களுக்கு தேவையான வெள்ளிப் பணம் மீனின் வயிற்றில் உள்ளது. செயல்படுங்கள், தண்ணீர் திராட்சை ரசமாக மாறும். செயல்படுங்கள், அவர் ஐயாயிரம் பேர்களுக்கு மேல் திருப்தியாக்குவார். செயல்படுங்கள், செங்கடல் இரண்டாக பிளக்கும். செயல்படுங்கள், எரிகோ மதில் சாயும். செயல்படுங்கள், காற்றும் கடலும் அமைதியாக மாறும். செயல்படுங்கள், உங்கள் மூலம் அற்புதம் நடக்கும் மாற்கு 16:17-20.

# சகல கிறிஸ்தவ சேவையிலும் காணப்படும் வல்லமை

***The Dynamic of all Christian Service***

Samuel Chadwick (1860-1932)

தூய ஆவியானவரின் வரம் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு விசேஷித்த அடையாளமாயிருக்கிறது. நமது விசுவாசத்தின் மையமாக அது காணப்படுகிறது. அனைத்து கிறிஸ்தவ அனுபவங்களுக்கும் இரகசியம் அவரது பிரசன்னம் நம்மில் வாசமாயிருப்பதுவே. நம்மில் வாசமாயிருக்கும் அவரது சத்துவத்தின் வலிமை நமது கிறிஸ்தவ சேவைகளுக்கும் வல்லமையளிக்கிறது.

ஆவியானவரைக் குறித்த வாக்குத்தத்தங்கள் நமக்கு சவாலாயிருக்கின்றன. பெந்தேகொஸ்தே நாளைக் குறித்த அறிக்கையும் நமக்கு சவாலாயிருக்கிறது. கிறிஸ்தவ சபையின் வரலாறும் அவ்வாறே நமக்கு சவாலாயிருக்கவில்லையா? நாம் தூய ஆவியானவரை விசுவாசிக்கிறோமா?

பெந்தேகொஸ்தே நாளின் ஆசீர்வாதம் நிறைவானது. காற்று, அக்கினி ஆகியவை அந்த வரத்தின் நோக்கம், தரம் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. ஆனால் அதின் முக்கியத்துவம் என்னவெனில் கூடியிருந்த அனைவரும் தூய ஆவியால் நிரப்பப்பட்டனர் என்பதே.

### ஆவியின் நிறைவு வித்தியாசத்தை உண்டுபண்ணுகிறது

வில்லியம் ஆர்தர் என்பவர், 'அக்கினி நாவு' என்ற தமது புத்தகத்தில் இந்த வேறுபாட்டினை இவ்வாறு எடுத்துரைக்கிறார். 'ஒரு இரும்புத்துண்டு கருமையாகவும் குளிர்ச்சியாகவும் குறிப்பிட்ட வெப்பநிலை உடையதாகவுமிருக்கிறது. அதைச் சூடுபடுத்தும் போது குறிப்பிட்ட வெப்பநிலையில் எரியக் கூடியதாகிவிடுகிறது. அதின் தோற்றத்தில் அது நெருப்புத் துண்டாகி அது தொடுவதையெல்லாம் எரியச் செய்யக் கூடியதாகவுமிருக்கிறது.'

'ஒரு துண்டு பனிக்கட்டி சூடாக்கப்படுமுன் திடமாகவும் உடைக்கக்கூடாததாகவுமிருக்கும். ஆனால் அக்கினியால் அது உருகி ஓடத் தொடங்கும். இன்னும் சூடாக்கப்படும் போது நீராவியாகி ஆகாயத்தில் எழும்பும்.'

### பெந்தேகொஸ்தே ஏற்படுத்தும் வேறுபாடு

ஆவியானவர் நமது அந்தரங்க பகுதிகளில் வாசமாயிருப்பதோடு, அவர் நம்மில் முழுவதுமாக ஊடுருவி நம்மை வல்லமைப்படுத்தி நமது தன்மைகளை யெல்லாம் கட்டுப்படுத்துகிறார். மேல் வீட்டறையில் காத்திருந்த சீடர்களை தரிப்பித்த ஆவியானவர் இன்னும் அர்ப்பணமுள்ள விசுவாசிகளைத் தரிப்பிக்கிறவராயிருக்கிறார்.

அவர் தம்மையும் தரிப்பித்து அவருக்குள் அனைவரையும் தரிப்பிக்கிறார். அவர்களில் அவர் ஒரு சரீரத்தைக் காண்கிறார். அவர்கள் அவரில் வல்லமையையும், ஆவிக்குரிய வெளிப்பாட்டையும் செயல்பாட்டையும் காண்கிறார்கள். எந்தக் குழப்பமும், தனிப்பட்ட உணர்வு இழப்புமின்றி மற்றும் மாற்றமுமின்றி ஒருமை ஏற்படுகிறது

இந்த விளைவுகளை பெந்தேகொஸ்தே நாளில் அப்போஸ்தலர்களில் காண்கிறோம். குறிப்பாக அந்த அனுபவம் எல்லாவிதத்திலும் வாக்குத்தத்தத்திற்கு தொடர்புடையதாயிருக்கிறது. இயேசு தாமே ஆவியானவரைக் குறித்து அவர் பூரண அறிவைக் கொண்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் தாமே கற்பிக்காதவற்றை சத்திய ஆவியானவர் போதிப்பார் என திட்டமாகக் கூறினார். அது அப்படியே நிறைவேறியது

பெந்தேகொஸ்தே நாளில் ஞானத்தோடும் நிச்சயத்தோடும் அவர்கள் போதித்தது அற்புதமானது. தீர்க்கதரிசனம் புதிய அர்த்தத்தோடு பிரகாசித்தது. கிறிஸ்துவின் மரணம் உயிர்த்தெழுதல் ஆகிய சத்தியங்கள் தேவனுடைய நித்திய திட்டத்தின் ஒளியில் விளக்கப்பட்டன.

தேவனுடைய வசனம் மறுமலர்ச்சி பெற்றது. கிறிஸ்துவின் போதனைகள் ஊழியம் ஆகியவைப் புதிய அர்த்தமுடையவைகளாயின. அவர்களுடைய மந்தமான நிலை மாறியது. அவர்களது வெளிப்பார்வையும் வேறுபட்டது. தூய ஆவியானவரின் வெளிச்சத்தில் வேதவாக்கியங்கள் பளிச்சிட்டன.

அவர்களது அறிவைவிட குணாதிசயத்தில்தான் அதிக மாற்றம் உண்டானது. சுவிசேஷங்கள் அவர்களைப் பெருமையுடையவர்களாகவும் வாதமிடுகிறவர்களாகவும் சுயநலம் மிக்கவர்களாகவும், கோழையர்களாகவும் சித்தரிக்கிறது. ஆனால் அப்போஸ்தலர்களின் நடபடிகளின் ஆரம்ப பகுதிகளில் அவர்களின் சரித்திரம் மாறுபடுகிறது. ஆண்டவராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவர்கள் நடுங்கியவர்களாக யூதர்களுக்குப் பயந்து பூட்டிய அறைக்குள் இருந்தனர். ஆனால் பெந்தேகொஸ்தே அனுபவத்திற்குப் பின்னால் அவர்களில் ஏற்பட்ட மாற்றம் அவர்கள் பகிரங்கமாக இயேசுவைப் பிரசங்கிக்கவும் இயேசுவை மரணாக்கினைக்குட்படுத்தியவர்களைக் குற்றப்படுத்தவும் துணிவு கொடுத்தது.

### இதனை நாம் எவ்வாறு அளவிடுகிறோம்?

பெந்தேகொஸ்தேயின் நிறைவின் அந்தஸ்திற்கு நாம் உயர்ந்திருக்கிறோமா? பரலோகத்திற்குரியவைகளைக் குறித்து நமது நம்பிக்கை என்ன? பெந்தேகொஸ்தேயின் நிறைவு வரும் போது நிச்சயமின்மை முடிவுபெறும்.

பாவத்தின்மேல் வல்லமையிருக்கிறதா? சத்திய ஆவியானவர் தூய்மையின் ஆவியானவருமாயிருக்கிறார். பெந்தேகொஸ்தே நாள் மாம்ச எண்ணங்களை ஆவிக்குரிய காட்சியாகவும், பெருமையை தாழ்மையாகவும், சுயநலத்தை அன்பாகவும், கோழைத்தனத்தை தைரியமாகவும் மாற்றிவிட்டது. அது இருதயங்களிலும் வாழ்க்கையிலும் மறுமலர்ச்சியைக் கொண்டு வருகிறது.

ஆவியின் நிறைவால் வெற்றி வருகிறது. பாவத்தின் மேலுள்ள வெற்றியின் சந்தோஷமுண்டா? சராசரி கிறிஸ்தவனுடைய அந்தஸ்து ஆவியால் நிரப்பப்பட்ட ஒருவருடைய அந்தஸ்தை எட்டமுடியுமா? "உலகம் அந்த சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலுமிருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது *யோவா.14:17* என்று இயேசு கூறினார்.

விசுவாசிகள் ஆவியால் நிரப்பப்பட்டிருந்தால் உலகத்தின் பகட்டான காரியங்களுக்கும் கசப்பான ஊற்றுகளண்டைக்கும் செல்லமாட்டார்கள்.

### சேவைக்கான வல்லமை

நாம் குன்றிப்போவதற்கான காரணம் வெளிப்புறமான கஷ்டங்களா அல்லது உள்ளான பெலவீனமா? ஏராளமான ஊழியர்கள் வெவ்வேறு விதமான ஊழியங்களைச் செய்தும் பலனில்லை. ஜனங்களின் வாழ்வில் சபை ஏற்படுத்தியிருக்கும் தாக்கம் என்ன? அக்கிரமத்தின் கோட்டைகளின் மீது அதன் அழுத்தம் என்ன? மக்கள் மனந்திரும்புகிறார்களா? பெந்தேகொஸ்தேயின் மூலம் விழிப்புணர்வு, பாவ உணர்வு, மனந்திரும்புதல், ஞானஸ்நானம் ஆகியவை தொடர்ந்தன. ஆவியின் வரம் வல்லமையின் வரம். வல்லமையில்லை என்றால் ஆவியானவரால் நிறையப்படவில்லை என்பது தான் பொருள். (*லூக்.24:49, அப்.1:8* படிக்க) ஆவியின் நிறைவால் சந்தோஷமும், சாட்சியும், தியாகமும் பெருக்கெடுத்தோடின.

### வறண்ட நிலத்தின் மேல் பிரளயத்தின் வாக்குத்தத்தம்

ஆக சபையின் ஒரே தேவை பெந்தேகொஸ்தேயின் நிறைவான ஆசீர்வாதம் (*ஏசா.44:3*) பிரளயம் அழுக்குகளை எடுத்துச்சென்று, பள்ளங்களை நிரப்பி, வனாந்தரத்தைச் செழிப்பாக்கும். எல்லா இடங்களிலும் கேட்கிறவர்களுக்குத் தமது ஆவியை ஊற்ற தேவன் காத்துக் கொண்டிருக்கிறார் *யோவா.7:37-39; லூக்.11:1-13.*

தேவன் சாதாரண மக்களை அசாதாரண வலிமையால் நிரப்ப வாஞ்சிக்கிறார். பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோர் இயேசுவுக்காகத் தங்களை அர்ப்பணித்தவர்கள். அவர்கள் இயேசுக் கிறிஸ்துவை விசுவாசித்தார்கள். அவருடைய மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் சாட்சிகள். ஆனால் பெந்தேகொஸ்தின் அனுபவம் இல்லாமல் பணியாளர்களும் ஸ்தானாபதிகளும், பிரசங்கிக்கிறவர்களும், சுவிசேஷகர்களும் அற்புதங்களைச் செய்கிறவர்களுமாயிருந்தனர்.

வாக்குத்தத்தத்தின்படி காத்திருந்து ஜெபித்தபோது ஆவியானவர் வந்து இறங்கினார். அவர்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டார்கள் (*லூக். 24:48-53; அப்.1:4-5; 13-14; அப்.2*)

# கிழக்கு ஐரோப்பாவுக்கு அப்போஸ்தலனான பேசில் மலாஃப்

## *Basil Malof : Apostle to Eastern Europe (Part-2)* பகுதி-2

James A. Stewart (1910-1975)

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப பகுதியில் பேசில் அடிமைகள் மத்தியில் சுவிசேஷத்தை அறிவிக்க தேவனால் அனுப்பப்பட்டார். ஸ்பர்ஜனுடைய 'போதகர்கள் கல்லூரியில்' பட்டம் பெற்ற பின் ரஷயாவில் St. பீட்டர்ஸ்பர்க்கில் ஊழியத்தை ஆரம்பித்தார். அந்த பணி உறுதியடைந்த போது மாஸ்கோவில் ஊழியத்தைத் தொடர்ந்தார். பூர்வீக சபையிலிருந்து எதிர்ப்பு ஏற்பட்ட போது ரஷியாவிலிருந்து கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டார். இப்போது நாம் வாசிக்கப்போகும் பகுதி ஆண்டவர் எவ்வாறு அவரை அடிமை மக்களுக்கு கிறிஸ்துவை அறிவிக்க ரஷியாவின் வெளி எல்லையில் பயன்படுத்திய ஒரு வழியை குறித்ததாகும்.

போதகர் பேசில் மலாஃப்புக்கு அனேக ஆவிக்குரிய துன்பங்கள் வாழ்க்கையில் ஏற்பட்டன. அவரது யாத்திரை எப்போதும் சமமாயிருக்கவில்லை. ஆரம்பத்திலிருந்து கடைசிவரை பார்க்கக் கூடியதாக அந்த ரஸ்தா நேராகவுமிருக்கவில்லை. சந்தேகங்களும், துன்பங்களும், வேதனைகளும், பிரச்சனைகளும் நிறைந்தே காணப்பட்டது. அவரோடு நான் சில இருண்ட இரவு, பகல்களிலிருந்தபோது கதவுகள் அவருக்கெதிராக அடைக்கப்பட்டதைக் கண்டு அவரது அன்பான பரம பிதாவைப் புரிந்து கொள்ள கஷ்டப்பட்ட நாட்களுண்டு.

இவைகளில் அவர் தனது அன்பான சொந்த நாட்டையும் மக்களையும் விட்டு பிரிந்தது கடினமான அனுபவமாகும். இப்போது ஸ்வீடனுடைய தலைநகரமான ஸ்டாக்ஹோமில் தன்னைச் சுற்றிலும் அவரை நேசித்த திரளான மக்களிலிருந்தபோதும், அவரது சோதனை அவரது வாழ்வில் தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதி என்பதை ஏற்றுக்கொள்வது கடினமாயிருந்தது. தேவன் ரஷியாவில் சுவிசேஷப் பணி செய்ய அவரை அழைக்கவில்லையா? தேவன் அவரை வல்லமையாக பயன்படுத்தவில்லையா? ஏன் அவர் துரத்தப்பட்டு பணி தடைபட வேண்டும்? அவர் ஸ்வீடனில் இருக்க விரும்பவில்லை. St. பீட்டர்ஸ்பர்கிலும், மாஸ்கோவிலும், ரிகாவிலும் இருக்க விரும்பினார்.

அவர் ஸ்வீடன், நார்வே போன்ற இடங்களில் ஊழியம் செய்தபோது வல்லமையான தூய ஆவியானவரின் எழுப்புதல் ஏற்பட்டு 4000-க்கும் அதிகமான மக்கள் கூடி வந்து வசனத்தைக் கேட்டனர். ஆனால் அது ரஷியா அல்ல. சூழ்நிலை அவரை அங்கு கொண்டு வந்தது. இந்நிலையில் ஆண்டவரைத் துதித்துக் கொண்டிருப்பது கடினமாயிருந்தது.

அதே வேளையில் திருமதி போர்டுமேன் என்ற அமெரிக்க சகோதரி தன் கணவரை இழந்து இருளான அனுபவங்களைக் கடந்து சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் சரித்திரப் பூர்வமான கெஸ்விக் எழுப்புதல கூடுகைகளை நடத்த போதனை கொடுப்பதில் சிறந்த பங்குடையவர்கள். ஆண்டவர் அவர்களிடம் "உன் அன்பு கணவரை நான் எடுத்துக்கொண்ட இப்பாதையில் நீ என்னைத் துதிக்க விரும்புகிறேன்" என்று பேசினார்.

"எப்படி முடியும் ஆண்டவரே?" என்று அவர்கள் கேட்டார்கள். 'துதி' என்ற வார்த்தையை சொல்லிப் பார்த்தும் அவர்களது இருதயம் அதற்கு இணங்கவில்லை.

பின்பு அவர்கள் 'ஆண்டவரே நீர் எனக்குத் துதியின் ஆவியைத் தந்தால் உம்மைத் துதிப்பேன்' என்றார்கள். ஒரே நிமிடத்தில் துதியின் ஆவியால் நிரப்பப்பட்டார்கள்.

பேசிலினுடைய நிலை இப்போது அதேபோலாகிவிட்டது. அவர் சந்தோஷமாகப் பாடினார். தேவனுடைய இந்தத் திட்டத்திலும் அவருடைய நோக்கம் இருப்பதை விசுவாசித்தார். தேவன் துதியின் ஆவியை அவருக்குக் கட்டளையிட்டார். இருள் அகன்றது. திடீரென ஆச்சரியப்படும் படியாக ஒரு புதிய பயனுள்ள வாசல் ஊழியத்திற்காகத் திறந்தது.

### புதிய திறந்த வாசல்

ரஷியாவில் முன்பு பேசிலுக்கு பழக்கமான ஈவான் யாக்கோவலேவிச் உர்லாப் என்ற நண்பர் பேசிலிடம் வந்து ஒரு சவாலான செய்தியைச் சொன்னார். ஏராளமான ரஷிய போர் வீரர்கள் ஜெர்மானியரால் கைது செய்யப்பட்டு யுத்த முகத்தின் கிழக்குப் பகுதியில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஓரிடத்தில் நடைபெற்ற யுத்தத்தில் மட்டும் ஒரு இலட்சம் ரஷிய வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். முதல் உலக மகா யுத்தம் ஆரம்பித்துவிட்டது. ஐரோப்பா முழுவதும் கலக்கமடைந்திருக்கிறது என்பதுதான் செய்தி.

இதைக் கேட்டதும் பேசிலுடன் தேவன் இவ்வாறு பேசியது போலிருந்தது. "அவர்கள் உன்னை ரஷியாவிலிருந்து துரத்தினார்கள். இப்போது நான் ஒரு கூட்டம் மக்களை ரஷியாவிலிருந்து ஜெர்மனிக்குக் கொண்டு வந்திருக்கிறேன்". இப்போது பேசில் 3½ மில்லியன் ரஷிய போர்க்கைதிகளுக்கு சுவிசேஷம் சொல்ல வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் வெவ்வேறு தூரமான பகுதிகளிலிருந்து வந்தவர்கள்.

இவர்கள் மீது பாரம் கொண்ட பேசில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் உதவியை நாடினார். தனது நாட்டு மக்களாகிய இவர்களுக்கு சிறைக் கைதிகளின் குடியிருப்புகளில் சுவிசேஷ ஊழியம் செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்ய வாஞ்சித்தார்.

### ஐக்கிய நாடுகளுக்கு வந்து சேருதல்

ஏப்ரல் மாதம் 1915-ம் ஆண்டு பேசில் தமது மனைவி பார்பரா மகன் டானியல் ஆகியோருடன் நியூயார்க் துறைமுகம் வந்து சேர்ந்தார். அவரது வருகையைக் குறித்துப் பத்திரிகைகள் முன்பே விளம்பரம் செய்திருந்தபடியால் நியூயார்க்கிலுள்ள ஒரு பாப்திஸ்து மிஷன் தலைமை அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். வட அமெரிக்கா முழுவதுமுள்ள ரஷிய பிரிவுக்கு (department) அவர் மேலாளராக நியமிக்கப்பட்டார். விரைவில் ரஷிய சமுதாயத்திற்கு சுவிசேஷம் அறிவிப்பதில் மும்முரமாய் ஈடுபட்டார். திரள் திரளாக ஆத்துமாக்களின் அறுவடை ஏற்பட்டது. எனவே ரஷியன் - உக்ரைனன் பாப்திஸ்து யூனியனை ஆரம்பித்தார்.

அவர் வட தென் பாப்திஸ்து சபைகளின் வருடாந்திர எழுப்புதல் கூட்டங்களில் பேசுவதற்காக அழைக்கப்பட்டார். இங்கு தனது சொந்த மக்கள் ஜெர்மானியர்களால் கைது செய்யப்பட்டிருப்பதை அறிவிக்கும் வாய்ப்பு கிடைத்தது. 1916 பெப்ருவரி முதல் நாள் கிறிஸ்தவ தூதன் என்ற பத்திரிகையின் பிரதம பத்திராதிபரும் தலைவருமான ஒரு பெரியவரால் ஒரு குழு ஆரம்பிக்கப்பட்டது. அந்த பத்திரிகை சுமார் 2 மில்லியன் மக்களால் வாசிக்கப் பட்ட ஒன்று. நியூயார்க்கிலுள்ள பிரிஸ்பிட்டீரியன் சபைத் தலைவர் J.H.ஜோவெட் ஒருநாள் ஞாயிறு காலை ஆராதனை காணிக்கையாக கிடைத்த 3000 பவுண்டுகளை ஊழியத்திற்காகக் கொடுத்தார். மேலும் லாஸ் ஏஞ்சலிஸிலுள்ள வேத பாடசாலையிலிருந்து R.A.டாறியும் மூடி வேத கலாசாலையிலிருந்து ஜேம்ஸ் கிரே என்பவரும், பாஸ்டனிலுள்ள ட்ரெமென்ட் டெம்பிள் பாப்திஸ்து சபையிலிருந்து கோர்ட்லாந்து மேயர்ஸீம் குழுவின் அங்கத்தினர்களாக சேர்ந்து அதிக உதவி செய்தனர். இவர்களோடு பல நண்பர்கள் சேர்ந்து ரஷிய போர்க்கைதிகளுக்கு உதவி செய்ய முன்வந்தனர். இலட்சத்திற்கு அதிகமான பவுண்ட்கள் சேகரிக்கப்பட்டன.

ஸ்பர்ஜன், மூடி, டூால்டேமான், டாறி, F.B. மேயர் மற்றும் அனேகர் எழுதிய சுவிசேஷ துண்டு பிரதிகள் பார்பரா மூலம் ரஷிய மொழியாக்கம் செய்யப்பட்டு பாப்திஸ்து பிரசுர சங்கத்தால் அச்சிடப்பட்டன. தன்னார்வ தொண்டர்களும், சுவிசேஷகர்களும் சிறைக்கைதிகளை சந்தித்து, நூற்றுக் கணக்கான புதிய ஏற்பாடுகளையும், துண்டு பிரதிகளையும் வினியோகித்தனர். கைதிகள் ஜெர்மன் மொழியை அறிந்திருந்தபடியால் ஆவலோடு அவற்றை வாங்கிப் படித்தனர்.

இந்தப் பணியில் தேவனுடைய விரல் வெளிப்பட்டது. குறைந்தது 30,000 அல்லது அதற்கு அதிகமான போர் கைதிகள் இரட்சிப்படைந்தனர். ஒரு முகாமில் மட்டும் தங்கியிருந்த 5000 பேரில் சுமார் 6 மாதங்களில் 872 பேர் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்று தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர் என்று பேசில் ஒரு கடிதம் மூலம் அறிந்துகொண்டார். எனவே போர்க் கைதிகளின் முகாமில் உறுதியான புதிய ஏற்பாட்டின் உபதேச அடிப்படையிலான முதல் பாப்திஸ்து சபை ஆரம்பமானது.

வெர்செய்ல்ஸ் சமாதான உடன்படிக்கை 1918-ல் ஏற்பட்டது. அப்போது இந்தப் போர்க் கைதிகள் தங்கள் சொந்த இல்லங்களுக்குத் திரும்பினர். தேவனுடைய ஜாக்கிரதையுள்ள ஊழியக்காரனான பேசில் ஜெபத்தோடு இரவும் பகலும் ஓய்வில்லாமல் ஊழியத்தை கவனித்து வந்தார். இப்போது அவருடைய மிகப்பெரிய கதறல், 'தேவனே இந்த இளம் விசுவாசிகள் தங்கள் சொந்த வீடுகளுக்கும், நகரங்களுக்கும், பட்டணங்களுக்கும், கிராமங்களுக்கும் சுவிசேஷ பகுதிகளைக் கொண்டு சென்று அவர்களது அருமையானவர்களும், அயலகத்தாரும் இரட்சிப்பிற்குள் வர பயன்படுத்தட்டும்' என்பதாகும்.

# நமது குடும்பங்களில் இழந்து போனவர்களுக்காக ஜெபித்தல்

***Praying in our families for lost people***

Kim Butts

நமது குடும்ப ஜெபங்களில் இழந்துபோன இருவகைக் குழுவினருக்காக ஜெபிக்கிறோம். முதல் வகையினர் இரட்சிக்கப்படாத குடும்ப அங்கத்தினர், நண்பர்கள், அயலார், அறிமுகமானோர் ஆகியவர்களாகும். பூமியின் எல்லையெங்குள்ள இழந்து போன மக்கள் இரண்டாம் குழுவில் அடங்குவர். ஆயினும் நமது ஆண்டவரின் மிகப் பெரிய பார்வையைக் குறித்து 1 தீமோ.2:4-ல் படிக்கிறோம்: "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்." அவர் நம்முடைய இருதயங்களில் இழந்துபோன மக்களைக் குறித்த அன்பை வைத்துள்ளார்.

உங்கள் குடும்பத்தினருக்கு இழந்து போனவர்களைக் குறித்து தேவனைப் போன்ற பார்வையிருக்கிறதா? அனேகரது வாழ்வில் ஆண்டவர் செயல்பட்டு அதனால் அவர்கள் இருதயங்கள் தூண்டப்பட்டு அவருடைய அன்புக்கும் இரட்சிப்புக்கும் நேராக இழுக்கப்பட ஜெபிக்க ஆரம்பிப்பீர்களா? விசுவாசமுள்ள ஜெபம் இதை சாத்தியமாக்கும் என்று வேதம் கூறுகிறது. நீங்கள் ஜெபிக்க ஆரம்பித்தால் தேவன் இழந்துபோன மக்களுக்கான பாரத்தை உங்கள் இருதயத்தில் தருவார். இந்தப் பெரிய கட்டளைக்கு கீழ்ப்படிகிற ஒரு குடும்பம் மூலமாக தேவன் பெரிய காரியங்களைச் செய்ய முடியும். இது எவ்வளவு ஆச்சரியமானது! நீங்கள் ஜெபிப்பதால் தேவன் கேட்டு இழந்து போனவர்கள் அவரை அறிகிற அறிவின் சத்தியத்தை அடைவார்கள். உங்கள் குடும்ப ஜெபம் அருகிலும், தூரத்திலும் உள்ளவர்களையும் பூமியின் எல்லை களிலுள்ளவர்களையும் தாக்கமடையச் செய்யும்.

உங்கள் ஜெபம் இரட்சிப்படையாதவர்கள் இரட்சிப்படைய வல்லமையாக பயன்படுத்தப்பட வேண்டும். தேசம், மக்கள் கூட்டம், குடும்பம், நண்பர்கள் எனப் பெயர்களைக் குறிப்பிட்டு ஜெபிக்கலாம். "...... மனுஷரால் இது கூடாததுதான். தேவனால் இது கூடாததல்ல; தேவனாலே எல்லாம் கூடும்" மாற்.10:27. பிதாவே எங்குமுள்ள எல்லா மக்களும் இரட்சிப்படைவது உமது அற்புதமான கிருபையால் கூடும் என்பதற்காக உம்மைத் துதிக்கிறோம்.

"தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குள் பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" 2 கொரி.4:4. கிருபையுள்ள ஆண்டவரே, அவிசுவாசிகளைக் குருடாக்கியிருக்கும் காரியங்களை அகற்றி கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மகிமையான ஒளியை அவர்கள் காணச்செய்யும்.

"என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்" யோவா 6:44. அற்புதமான ராஜாவாகிய ஆண்டவரே, தயவாக ..........-ஐ உம்மிடமாக இழுத்துக்கொள்ளும். உமது ஆவியால் அவனது இருதயம் தூண்டப்படட்டும். நீர் யார் என்பதை அவன் அறியட்டும்.

"அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்" யோவா 16:8. பரலோக பிதாவே, பாவத்தில் மூழ்கிய மக்கள் என்ன செய்கிறார்கள் என்பதை உணர்ந்து, மனந்திரும்பி உமது மன்னிப்பையும், இரட்சிப்பையும் பெற்றுக் கொள்ள உதவி செய்யும்.

"தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" 2 பேதுரு 3:9. ஆண்டவரே நீர் இவ்வளவு நீடிய பொறுமையுடையவராயிருப்பதற்காகவும் எல்லா மக்களையும் நேசித்து, ஒருவரும் இழந்து போகாமலிருக்க விரும்புவதற்காகவும் நன்றி.

"ஜெபத்தைக் கேட்கிறவரே மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்" சங்.65:2. ஆண்டவரே நீர் ஒருவரே ஜெபத்தைக் கேட்டு பதிலளிக்கிறபடியால் உம்மைத் துதிக்கிறோம். இழந்து போனவர்களின் பெயர்களை உத்தமமாக உம்மிடம் கொண்டுவர எங்களுக்கு உதவி செய்யும்.

(1 நாளா.16:8-11 படிக்க) ஆண்டவரே நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்கள் வாழ்வில் நீர் எங்களுக்குச் செய்தவைகளையெல்லாம் அவிசுவாசிகளுக்குச் சொல்ல எங்களுக்கு தைரியம் தாரும்.

"அதிசயங்களை செய்கிற தேவன் நீரே, ஜனங்களுக்குள்ளே உம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணினீர்" சங்.77:14. பிதாவாகிய தேவனே ஜனங்கள் மத்தியிலே உமது வல்லமையை விளங்கப் பண்ணி உமது அற்புதங்களால் அவிசுவாசிகள் எந்த சந்தேகமுமின்றி நீர் யார் என்பதை அறியச்செய்யும்.

"ஜாதிகளே எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள், ஜனங்களே எல்லாரும் அவரை போற்றுங்கள், அவர் நம்மில் வைத்த கிருபை பெரியது. கர்த்தரின் உண்மை என்றென்றைக்குமுள்ளது" சங்.117:1-2. பிதாவே இழந்து போனவர்களின் வாழ்வை சந்தித்து உமது பெரிய அன்பை அவர்கள் காணவும் உமது உண்மை என்றென்றைக்குமுள்ளது என்பதை அவர்கள் அறியவும் செய்வீராக.

"ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும்" மத்.24:14. நாங்கள் உமது மகிமையான வருகையைக் காணத்தக்கதாக உலகமெங்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட நாங்கள் ஜெபிக்கிறோம். அனேக மக்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்படுவார்களாக.

"இவைகளுக்குப் பின்பு, நான் பார்த்தபோது இதோ சகல ஜாதிகளிலும், கோத்திரங்களிலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும் ஒருவரும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள் வெள்ளை அங்கிகளைத் தரித்து தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து சிங்காசனத்திற்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்" வெளி.7:9-10. கிருபையுள்ள தேவனே, நீர் எல்லா தேசம், கோத்திரம், பாஷை மக்களும் உமக்கு முன்பாக நின்று உம்மைத் துதிக்க ஆசையா யிருக்கும் போது நாங்கள் எப்படி உம்மைத் துதிப்போம்! ஆண்டவராகிய இயேசுவே சீக்கிரம் வாரும்!

☆☆☆

**Registered with the Registrar of News Paper**
**For India under R.N.I. TN TAM 11967/'67**
**Date of Publication : 27th of Every month**

***Book Packets contains periodicals***

To

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

*Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.*
*Editor : Wesley Devadason*